**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**வேலூர் மாவட்டம்**

**வேலூர் மாவட்டக் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 1062/அ1/2019 நாள். 31.10.2019**

**பொருள்:** வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – ஒன்றிய அளவில் உள்ளஅரசு மேல்நிலை / உயர்நிலை – பள்ளியினை குறுவளமையமாக கொண்டு மாற்றி அமைக்கப்பட்ட பள்ளிகளில் – கல்வி மேம்பாட்டுப் பணியினை மேற்கொள்ள – புதிய அணுகுமுறையினை செயல்படுத்தியது – தொர்பாக.

**பார்வை:** சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2448/B7/SS/BRC/2019, நாள்.07.08.19.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள். 26.08.19.

–––––––

பார்வையில் காணும் சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் மேல்நிலை / உயர்நிலைப் பள்ளியினை குறுவளமைய தலைமையிடப் பள்ளியாக கொண்டு, ஒன்றிய அளவில் உள்ள தொடக்க / நடுநிலை / உயர் நிலைப் பள்ளிகளை இணைத்து புதிய குறுவளமையங்களாக தற்போது மாற்றி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. குறுவளமையத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்றுநர்கள் தவறாமல் அந்தந்த குறுவளமையத்தில் வருகைப்பதிவேட்டில் கையொப்பமிடல் வேண்டும் (தனி வருகைப்பதிவேடு). மேலும் முகாம் மேற்கொள்ளும் நிலையில் முகாம் பதிவேட்டில் பதிவு மேற்கொண்ட பின்னர் சார்ந்த குறுவளமைய தலைமையாசிரியரிடம் தகவல் தெரிவித்து பின்னர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறுவளமையத்திற்குட்பட்ட பள்ளிகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பணியினை மேற்கொள்ளுமாறும், திட்டப் பணி தொடர்பாக பயிற்சி மற்ற இதர பணிகள் தொடர்பாக வட்டார வளமையத்திற்கு செல்லும்போது குறுவளமைய தலைமையாசிரியரிடம் தெரிவித்துவிட்டும் முகாம் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டும் செல்லுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஒம்.XXXXXX**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

**<u>பெறுநர் –</u>**

அனைத்து குறு வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள். (குறுவளமைய தலைமையாசிரியர் மூலமாக)

**நகல்** – 1. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ). (பிரதி மாதமும் வருகைப்பதிவேடு குறுவளமையத்திலிருந்து பெற்று ஊதியப்பட்டியலுடன் இணைத்தனுப்புதல் வேண்டும் – நடப்பு மாதம் 15 நாட்கள் (1–15), முந்தைய நாட்கள் 15 நாட்கள் (16 – 30)
2. அனைத்து குறுவளமைய தலைமையாசிரியர்கள்.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள். (வேலூர் / திருப்பத்தூர் / வாணியம்பாடி / இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம்) – பார்வை மற்றும் ஆய்வின் போது மேற்படி வருகைப்பதிவேட்டினை பார்வையிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
4. முதன்மைக் கல்வி அலுவலர் வேலூர்.

– அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.